Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.369/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.11 |
| | | Defence | |
| Name | | திரு.சொர்ணம் | |
| Father's Name | : | திரு.ராமகிருஷ்ணன் | |
| Village | : | ரஸ்தா | |
| Taluk | : | மானூர் | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 43 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20th day of June 2025.

(1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் ரஸ்தா குடியிருப்பில் ஆட்டோ ஓட்டி பிழைப்பு நடத்தி வருகிறேன். இவ்வழக்கில் காயம்பட்ட முகேஷ், ராஜபாண்டி, மாயாண்டி ஆகியோரை தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன சுப்பிரமணி என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டேன். மேற்படி முகேஷ், ராஜபாண்டி, மாயாண்டி ஆகியோருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு

விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

என்னை போலிசார் விசாரித்த போது, கடந்த 20.04.2022ம் தேதி மாலை 4.00 மணிக்கு துலுக்கர்பட்டிக்கு ஆட்டோ சவரிக்கு சென்று திரும்புபோது ஆஜர் 1முதல் 4 எதிரிகள் அரிவாள் மற்றும் பைப்பால் துலுக்கர்பட்டி குளத்திற்குள் வைத்து முகேஷ், ராஜபாண்டி, மாயாண்டி, சுப்பிரமணியன் ஆகியோர்களை தாக்கினார்கள் என்றும், அந்த சமயத்தில் முகேஷ், ராஜபாண்டி, மாயாண்டி ஆகியோர்கள் காயம் ஏற்பட்டு ஓடிவிட்டார்கள் என்றும் சுப்பிரமணியனை எதிரிகள் பைப்பால் அடித்து அரிவாளால் வெட்டி கொலை செய்ததை நான் நேரடியாக பார்த்துவிட்டு ஊரில் சென்று தகவல் சொல்லி போலிசார் மேற்படி பிரேதத்தை விசாரணை செய்யும்போது பிரேத விசாரணையின்போது உடன் இருந்து விவரங்களை சொன்னேன் என்றும் தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையான விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.369/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.12 |
| | | Defence | |
| Name | | திரு.ஈஸ்வரன் | |
| Father's Name | : | திரு.கணபதிதேவர் | |
| Village | : | ரஸ்தா | |
| Taluk | : | மானூர் | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 50 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20th day of June 2025.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் ரஸ்தா குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சொர்ணத்தை எனக்கு தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன சுப்பிரமணி என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. சுப்பிரமணி யாரால் எப்படி சொலை செய்யப்பட்டார் என்ற விவரமும் தெரியாது.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

என்னை போலிசார் விசாரித்த போது, கடந்த 21.04.2022 ம் தேதி காலை 8.00 மணிக்கு நானும் சாட்சி சொர்ணமும் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து இறந்துபோன சுப்பிரமணியன் சடலத்தை காவல் ஆய்வாளர் எங்கள் முன்பாக விசாரித்தபோது அவரை பற்றிய விவரங்களை நாங்கள் சொல்லி வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையான விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.369/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.13 |
| | | Defence | |
| Name | | **திரு.சூசை தேவசகாயம்** | |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Calling | : | **அரசு தரப்பு சாட்சி** | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20th day of June 2025.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது தாழையூத்து காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.04.2022 ம் தேதி மானூர் காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றிபோது காலை 8.00 மணிக்கு மானூர் காவல்நிலைய குற்ற எண். 120/2022 வழக்கில் கொலை செய்யப்பட்ட சுப்பிரமணியன் என்பவர் பிரேதத்தை திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில்

வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தபோது ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். பின்னர் 10.00 மணிக்கு ஆய்வாளரிடம் பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் பெற்று சட்டம் சார்ந்த மருத்துவத்துறை பேராசிரியரிடம் பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தேன். மரு்த்துவ அதிகாரியிடம் பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை நல்லடக்கம் பெற உறவினர்களிடம் ஒப்படைக்க ஒப்புதல் பெற்றேன். பிரேத பரிசோதனையின் போது பிரேதத்தில் இருந்த ஆடைகளை பெற்று காவல்நிலையம் கொண்டு வந்து ஒப்படைத்தேன். மேலும் வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட தபாலினை 09.05.2022ம் தேதி திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் 17.05.2022ம் தேதி ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனையின்போது எனக்கு வழங்கிய கடவுச்சீட்டு அ.சா.ஆ.11 ஆகும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோன்று சொன்னநேரத்தில், சொன்னவிதத்தில் பிரேத விசாரணையின்போது ஆய்வாளருடன் அவருக்கு உதவியான இருந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதன்பின்னர் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய ஒப்படைத்தாக

சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை உறவினர்களிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. மேலும் பிரேதத்தை மீதிருந்த சான்றுபொருட்களை ஆய்வாளரிடம் ஒப்படைத்தாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. சான்றுபொருட்களை வட்டார தடய ஆய்வகத்தில் ஒப்படைத்தாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் ஆய்வாளரிடன் வேண்டுகோளுக்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.